பாரதிய ஜனதா கட்சி - தமிழ்நாடு
BHARATIYA JANATA PARTY, TAMILNADU
Phone : 2435 9600, 2434 3444, 2432 7373 Fax : 044 - 2432 1771

**Dr. தமிழிசை சௌந்தரராஜன்** **தேதி : 02-07-2018**
**மாநில தலைவர்**

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

இன்று தமிழகத்திற்கு மிக மகிழ்ச்சியான செய்தி, காவிரி ஆணையத்தின் முதல் கூட்டம் இன்று டெல்லியில் நடந்திருப்பதாகும்.

இதுவே மிகப் பெரிய வெற்றி. காவிரி ஆணையம் அமைக்கப்படாதா? என நாமெல்லாம் பல்லாண்டுகளாக ஏங்கிக் கொண்டிருந்த காலகட்டங்கள் கடந்து, மத்திய அரசின் தெளிவான திட்டத்தை உச்சநீதி மன்றம் ஏற்றுக்கொண்டு அதற்கு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டு, அரசிதழிலும் பதியப்பட்டு, இன்று கூட்டமும் நடத்தப்பட்டு, பட்டுப்போய்க்கொண்டிருந்த தமிழக பயிர்களின் உயிர்காக்கும் முயற்சி ஆரம்பமாகிறது என்பதும் மகிழ்ச்சி.

இந்தக் கூட்டம் நடந்து, அதில் தமிழகத்திற்கு 30 டி.எம்.சி தண்ணீர் ஜூலை மாதம் திறந்துவிடப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டிருப்பது ஆணையத்தின் பலத்தைக் காட்டுகிறது.

முதலில் ஆணையம் அமைத்துக் கொடுத்த மத்திய அரசிற்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். ஆணையத்தின் இந்த முடிவை கர்நாடக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். முரண்டுபிடிக்க முடியாது.

மோடி அவர்களை விமர்சித்த எதிர்க்கட்சிகள் இன்று கர்நாடகம் 30 டி.எம்.சி தண்ணீர் திறந்துவிட அழுத்தம் கொடுக்க வேண்டும். 30 டி.எம்.சி என்பது நமது உரிமை. தமிழக முதல்வர் அவர்கள் சொன்னது போல , இது தமிழகத்திற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி. இந்த வெற்றியை அனைவரும் கொண்டாடுவோம்., நமது அன்பிற்கும் , மரியாதைக்கும் உரிய பிரதமர் மோடி அவர்களுக்கு நமது நன்றியை தெரிவித்துக்கொள்வோம்.

என்றும் தேசப் பணியில்

தமிழிசை சௌந்தரராஜன்

( Dr. தமிழிசை சௌந்தரராஜன் )